ஓலை 36 | ஓசை 137 | ஏப்ரல் 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முகமும் தமிழே!!




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்**
**தகைமைக்கண் தங்கிற் றுலகு.**

பகையையும் நட்பாக செய்து கொண்டு நடக்கும், பண்புடையவனது பெருந்தன்மையில் உலகம் தங்கியிருப்பதாகும்.

**Translation:**

The world secure on his dexterity depends,
Whose worthy rule can change
his foes to friends.

**Explanation:**

Whose worthy rule can
change his foes to friends.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# நதி போல

கூடிழந்த குருவி
முகம் புதைத்தா
அழுகிறது?

பொந்தினை இழந்த அணில்
தூக்குக் கயிற்றிலா
தொங்குகிறது?

கூண்டில் அகப்பட்ட கிளி
உண்ணாவிரதமா
இருக்கிறது?

துரத்தப்பட்ட நாய்
ஆழ்கடலிலா குதித்து
விடுகிறது?

கன்றினை இழந்த பசு
பால் சுரக்காமலா
இருக்கிறது ?



ஒரு பாதை முடிந்து விடலாம்
இன்னொரு பாதை
பிறக்கும்

ஒரு வாசல் மூடி விடலாம்
இன்னொரு வாசல்
திறக்கும்

ஒரு திசை திரும்பலாம்
இன்னொரு திசை
விரும்பும்

குட்டையைப் போல
தேங்கிக் கிடப்போருக்கல்ல
நதி போல
ஓடிக் கொண்டிருப்போருக்கு.

கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# இறைமாட்சி

அதிகாரம் : 39

படைகுடியொடு விளைச்சலும்
அமைச்சு நட்பரணுமான.
ஆறு அங்கங்களுடையோனே
அரசருள் ஆண்சிங்கமாவானாம்.

அஞ்சாமை வறியோர்க்கீதல்
அறிவுடைமை ஊக்கமாகிய.
நாற்குணங்களும் குறைபடாமையே
வேந்தர்க்கு சிறப்பாம்.

காலந்தாழ்த்தாமை கல்வியுடைமை
துணிவுடைமையாம் இம்மூன்றும்.
நாடாளும் மன்னனுக்கு
நீங்காமலிருத்தல் வேண்டுமாம்.

அறநெறிவழுவாமை நெறியற்றோரை
நாடுகடத்தல் வீரத்தில்குறையிலா.
மானமுடைமை இம்மூன்றுமுடையோனே
வேந்தருள் சிறந்தோனாம்.




செல்வப்பெருக்கலை உண்டாக்கலும்
வந்தபொருளை சேமித்துக்காத்தலும்.
தேசநலனிற்கு செலவுசெய்தலுமே
வல்லரசின் நற்கடமையாம்.

எளிமையுடைய இன்சொல்லனாய்த்
திகழும் மன்னனையும்.
அவனாட்சியின் தேசத்தையும்
இவ்வுலகமே புகழ்ந்தேற்றுமாம்.

இன்சொல்லொடு எளியோர்க்கீந்து
காக்கவல்ல வேந்தனையே.
மனதில் கருதிக்கொண்டு
இவ்வுலகம் அமையப்பெறுமாம்.

நன்முறையில் ஆண்டு
மக்கட்காக்கும் மன்னவனே.
அம்மக்களால் தெய்வமென்ற
உயர்நிலைவைத்து போற்றப்படுவானாம்.

குற்றமுரைப்போரை வெறுக்காது
பொறுமையுடன் பேணுகின்ற.
அரசின் குடைநிழலில்
இவ்வுலகம் தங்குமாம்.

கொடைஇரக்கம் செங்கோலுடன்
எளியோர் குடிகாத்தலென்னும்.
இந்நான்கிலும் சிறந்தவனே
அரசிற்கெலாம் ஒளிவிளக்கானவனாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# ஆசைகள் ஆயிரம்

ஆசைகள் நூறு அகத்தினில் இருந்தும்
காசதும் இன்றி கண்டிடும் வறுமையில்
ஏக்கங்கள் எல்லாம் எதிரே ஆட
ஆக்கமும் வருமோ அடைந்திட நானும்

தொலைவினில் தெரிவது தொட்டிட வேண்டும்
அலைந்திடும் மனத்தில் அமைதியும் வேண்டும்
பசியிலா வாழ்வை பார்த்திட வேண்டும்
கசிந்திடும் இரக்கம் காத்திட வேண்டும்

கல்விச் செல்வம் கற்றிட வேண்டும்
பொல்லா இழிவை புறம்தள்ள வேண்டும்
மதிப்பாய் நானும் வாழ்ந்திட வேண்டும்
மிதிக்கும் உலகம் மிரண்டிட வேண்டும்

நேர்மை போற்றியே நிமிர்ந்திட வேண்டும்
ஆர்த்திடும் ஆற்றல் ஆழியாய் வேண்டும்
எண்ணம் என்றும் ஏற்றமாய் வேண்டும்
திண்ணம் வாழ்வில் தேக்கிட வேண்டும்



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# செவிலியின் தேடல்

மனையில் காணா மடவரலைத் தேடி
மனை விட்டு கிளம்பினாள் செவிலித்தாய்.
விரிகதிர் காய,வெம்பரல் நிறை பாலையில்
விழிநீரோடு மகளைத் தேடி அலைபாயும் கண்கள்.
முக்கோலோடு,கரகமும், நிழற்குடை ஏந்திய
எவ்வுயிர்க்கும் தீங்குசெய்யா அந்தணரோ, எதிரே.
என்மகளை,பிறர் மகனோடு கண்டீராவென
பித்து பிடித்தாற் போல் வினவ,
அருஞ்சுரமதில் ஆணெழில் அண்ணலை
மாணிழை மடவரலோடு கண்டேன்.
மாணிழை மடவரலின் தாயோ,நீங்கள்.
மலையிடைப் பிறந்த மணக்கும் சந்தனம்
அலையிடைப் பிறக்கும் எழில் முத்தம்
யாழிடைப் பிறக்கும் நல்லிசை யாவும்
மனையிடை வாழ்வோர்க்கே உதவும் அன்றோ!
உன் மகளுக்கும்,உனக்கும் உறவு அத்தன்மைத்தே.
கற்போடு அவள் சென்ற வழி அறவழி தானே.
நீ அவளைத் தேடிப்பிரித்தல் சரியல்லவே!
உன் மகளின் வாழ்க்கை சிறந்திட
உன்னத வழியன்றோ,அவள் தேடியது.
நன்றே சென்றிடு,நீ திரும்பி !
என்றே கூறிச் சென்றார் அத்துறவி.



கவிஞர் செ.கலைவாணி,ஆஸ்திரேலியா

# சுயநலமின்றி

பொருள் தேடியலைந்து
தனக்கென்று வாழும்
சுயநல மனத்தைத் தூக்கியெறி.

கர்வப் போர்வையை விலக்கி
விழிகளில் அன்பும் கருணையும்
வழிய வாழ்ந்து பார்.



பிற உயிர்க்காகவும்
வருந்தும் உள்ளம் கொள்.

ஆசைகளைத் துறக்கத் துறக்க
உன்னில் விட்டகலும்
ஏக்கங்கள்.

சுயநலமின்றி மேகமாய்த் தவழ்ந்து
கொண்டிரு.
நீ அர்த்தமுள்ள மழையாவாய்.
இப்பிறவியில் மனிதனுமாவாய்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# மானுடப் பயிர் வளர்ப்போம்



இனிது இனிது மானிடராய் பிறத்தல் இனிது
அதனிலும் இனிது மாண்புற வாழ்தல்


தனக்காக மட்டுமே வாழாமல் பிறருகாக வாழ்பவர்கள்
என்றும் வாழ்கின்றனர் காலச்சுவடியின் பக்கங்களில்
மகான்களாக சிலர் இருக்க
அவர்களின் கரம்பிடித்து நடப்போம் நாம் நல்வழியில்

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று இல்லாமல்
இப்படித்தான் வாழ வேண்டும் என்று



தேசத்தந்தையாய், அன்னை தெரசாவாய், மகாகவியாய்,
கர்மவீரராய், காலம் வென்ற கலாமாய்

இன்னும் எத்தனை எத்தனையோ தலைவர்கள்
நீர் பாய்ச்சுகின்றனர் மானுடப் பயிர்களுக்கு
மானுடராய் தோன்றியதெல்லாம் மக்களுக்கு பணி செய்வதற்கு



பயிர் வளர்ப்போம்
மானுடப் பயிர் வளர்ப்போம்
அன்பென்னும் நீர் பாய்ச்சி
அறிவென்னும் அரண் அமைத்து
உள்ளத்தில் ஒருமை என்னும் உரம் சேர்த்து
கல்வி எனும் ஆசானால்
நன்மை எனும் கனி விளைய
சமுதாயம் என்னும் விளைநிலத்தில்
மானுட பயிர் வளர்ப்போம்





எல்லோரும் எல்லாமும் பெற்று விட்டால்
இல்லாமை இல்லாத நிலை எழுதி விட்டால்
வளரும் இந்த மானுடப் பயிர்
மண்ணில் நல்ல வண்ணம்.

கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# அந்திவானம்

தேகம் வருடிப் போகும்
குளிர் தென்றல்!
கூடடையும் பறவைகள்!
சில்வண்டின் ரீங்காரம்!
வானில் தவழ்ந்து வரும்
மேகக் கூட்டம்!
நிலவுக் காதலன்
உலா வரும் நேரமிது!
நானிலத்து நாரிகளின்
கன்னச் சிவப்பெடுத்து
அங்கம் எங்கும் பூசி
சிவந்ததோ அந்த
அந்திவானம்!

கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# வண்ணம்

வண்ணம் மிகவும் அழகுதான்
விழுமிடமெல்லாம் அழகோ அழகுதான்
அழகென்று அனைத்தையும் சொல்லி விடமுடியாது
ஆகாயம் பார்க்காத வரை
அந்த யானையின் தும்பிக்கை அசையாதவரை
கொசுவின் ரீங்காரம் காதருகாமை வராதவரை
வரப்போரம் சிறு நெல் சிந்தாமல் இருக்கும் வரை
வண்ணத்தால் நிரம்பிடும் இடம்தனிலே.

சிவப்புடன் வெள்ளை சேர்ந்தால்
அழகை உண்டு பண்ணலாம்
பச்சையுடன் வெள்ளை சேர்த்தால்
வனத்தினை உண்டு பண்ணலாம்
கருப்புடன் வெள்ளை சேர்த்தால்
பிறப்பினை உண்டு பண்ணலாம்

வானவில்லை தேடிவந்து
இறகை உதிர்த்து செல்கிறது
பச்சைக்கிளி.

நீலநிறம் தவறி விழுந்து
வானம் புள்ளியாகிறது
கைக்குட்டை குழியில்

கன்னங்குழிகளில் பதுங்கியது
மொத்தவண்ணத்தை
உண்டாக்கிய கருமை

மாமனுக்கு ஈரம் காட்டி
கட்டுடலை மஞ்சலாக்கியது
மாமன் மகள் உறவு



கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# அவளே உவமை

அவளை நதிக்கு உவமை சொல்ல மாட்டேன்
"ஓடி விடுவாள்"

அவளை நிலவிற்கு உவமை சொல்ல மாட்டேன்
மறைந்து விடுவாள்

அவளை பூவிற்கு உவமை சொல்ல மாட்டேன்
பறித்து விடுவார்கள்.

அவளை அதியசத்திற்கு உவமை சொல்ல மாட்டேன்
ஆர்ப்பரித்து விடுவார்கள்

அவளை உவமை சொல்ல
உலகில் ஒன்றுமில்லை என்பதனால்

அவளே அவளுக்கு உவமை என்பேன்
இதுவே
உண்மையென்பேன்



கவிஞர் மதீரா அறிவிப்பாளினி,இலங்கை

# பூமித் தாயைப் பாதுகாப்போம்

தோண்ட தோண்ட ஊறும் மணற் கேணியே
பொறுமையின் சிகரமாய் விளங்கும் பூமித்தாயே
பச்சைப் பசேல் என கண்ணுக்கு இதம் அளிக்குமே
உச்சி வெயிலில் நின்றாலும் மரங்கள் மூலமே
நிழல் கொடுத்து உதவுமே
அதிகாலை வேளையிலே புல்லில்
பனித்துளி விழுந்து அழகைக் கூட்டுமே
பூமிக்கு இயற்கையாய்
பச்சை கம்பளமாய்
திகழும் புல்வெளி
உன் மீது அமர்ந்துக் கொண்டு சுகம் காண்பதே தனித்தானே
நல்லதொரு மகனை பெற்றால் குடும்பமே பயன் பெறுமே
மரங்களை நட்டு வளர்த்தால் உன் சந்ததியே பயன் பெறுமே
மரத்தை வெட்டி வீசுகிறாய் அதனால் பயனென்ன
அவை சிந்தும் கண்ணீர் நம்மை துரத்த செய்யுமே
சுப நிகழ்வுகள் நடக்கும்போது மறவாமல்
மரத்தை நட்டு விடு
அவை வளர்ந்து உனது பெயரைச் சொல்லும்
பூமி குளிர்ந்தால்தான் நாமும் குளிர முடியும்
இவ்வையகத்தில் நிரந்தரமானது இரண்டு
இயற்கையும் இயற்கை காட்சியுமே
பாதுகாப்போம் பூமித்தாயை நம் அன்னை வடிவில்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# எண்ணம்

எண்ணத்தில் நிலவும்
நிலவில் உதவியும்
உதவியில் உயர்வும்
உயர்வில் பணிவும்
பணிவில் சாதனையும்
சாதனையில் விடாமுயற்சியும்
விடாமுயற்சில் வேதனையும்
வேதனையில் பயிற்சியும்

பயிற்சியில் உறுதியும்
உறுதியில் தன்னம்பிக்கையும்
நம்பிக்கையில் ஓட்டமும்
ஓட்டத்தில் தேட்டமும்
தேட்டத்தில் நாட்டமும்
நாட்டத்தில் பண்பும்

பண்பில் நேர்மையும்
நேர்மையில் நீதியும்
நீதியில் புரட்சியும்
புரட்சியில் எழுச்சியும்
எழுச்சியில் சமத்துவமும்
சமத்துவத்தில் அன்பும்
அன்பில் அக்கறையும்
அக்கறையில் பாதுகாப்பும்



பாதுகாப்பில் பொறுமையும்
பொறுமையில் துன்பமும்
துன்பத்தில் துணிவும்
துணிவில் போர்க்களம்
போர்களத்தில் போராட்டமும்
போராட்டத்தில் வெறித்தனமும்
வெறிதனத்தில் செயலாற்றுவதும்
செயலாற்றுவதில் செதுக்கலும்

செதுக்கலில் வலியும்
வலியில் வலிமையும்
வலிமையில் வழிகளும்
வழிகளில் பயணமும்
பயணத்தில் நெருக்கடியும்
நெருக்கடியில் மோதலும்
மோதலில் சரிவும்
சரிவில் படிப்பினையும்
படிப்பினையில் பாடமும்
பாடத்தில் அறிவும்

அறிவில் புரிதலும்
புரிதலில் தெளிவும்
தெளிவில் ஞானமும்
ஞானத்தில் பண்படுத்தலும்
பண்படுத்தலில் வெற்றியும்
வெற்றியில் மகிழ்ச்சியும்
மகிழ்ச்சியில் நிம்மதியும்
நிம்மதியில் வாழ்வும்

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# இன்பவுலா

பள்ளிச்சுற்றுலா
துள்ளிக் குதித்திட
மான்குட்டிகளாய் மாறி
மகிழ்ச்சிமகுடம் சூடி
அன்றாட அலுவல் அண்டாது தள்ளி
குதூகலமாய்த் தோழியருடன்
கொண்டாடித்தீர்க்க
கொழித்திடும் ஆனந்தப்பயணம்
அரக்கப்பரக்க எழுந்து தயாராகி
ஏகினோம் புட்பகப்பேருந்து
இன்பமாய்ப் பறக்க
கடைசி இருக்கைக்கு
குட்டிச்சண்டை
ஜன்னல் இருக்கைக்கு
சடுகுடு ஓட்டம்
எத்தனை நினைவுகள்
எழுகுது நெஞ்சிலே
காட்சியும் கானமுமாய்
கலகலப்பான தருணங்களே
கூச்சலும் கும்மாளமுமாய்
படியேறிப் பகைதுறந்து
புகைப்பனி விலக்கியே
பயணத்தில் பேருந்து
நதியும் மலையும்
நாசியில் இயற்கையின் மணமும்
அருவியும் ஆறும்
அலைகடல் பாறையும்
அருகிலே வந்திட
பெருமிதம் பொங்கிட



ஆட்டமும் பாட்டமும்
நாட்டமும் நோட்டமும்
ததும்பியே தாளத்துடன்
தோழியர் தித்திக்க
அன்றைய தினத்தில்
அதிஷ்ட தேவதைகளாய்
நட்சத்திர உணவகம்
நாக்கினிக்கும் பட்சணம்
பட்டணத்துப் பொருட்காட்சி
பொக்கிஷமான நுண்ணகம்
செயற்கை கோள்மண்டலம்
செம்மையான நூலகம்
மிருகங்களின் சாலை
மீனினங்களின் காட்சியகம்
அப்பப்பா... எத்தனையிடங்கள்
அடங்காத ஆசையோடு
பார்க்கப்பார்க்க பரவசம்
பாரினில் வருமோவந்தப்
பொற்காலம் இனிமேல்?
பள்ளிப்பருவமும் பாங்கர்களும்
பறந்து திரிந்த வேளைகளும்
மனதிலே பீறிடும்
மறக்காத நினைவலைகள்
அன்பான சுற்றுலா
அழியாத இன்பவுலா

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# சஞ்கட சந்திப்பு

எதிர்பாரா மழைக்கால
மாலை நேரத்தில்
அப்படி ஒரு
சந்திப்பினை நான்
எதிர்பார்க்கவில்லையடி

பிரிவிற்கு பிறகு
சந்திக்கும் நிலை
இப்படிப்பட்ட ஒரு
அந்திம நேரத்தின்
மழைச்சாரலில் யாருக்கும்
அமைந்திடக்கூடாது தான்
இருந்தாலும் நாம்
அப்படி சந்தித்துக்கொண்டோம்



ஒரு வார்த்தைக்கூட
பரிமாறிக்கொள்ள முடியாத
சூழலில் அது
ஒரு மயான அமைதியாய்
அமைந்தது - மழைச்சாரலின்
சத்தம் கூட
அமைதியாய் கேட்கிறது

ஆனால்
நம் இதயத்துடிப்பின்
சத்தமோ இடிப்போல
கேட்கிறது - ஒரு
வார்த்தை பேசிவிட
ஆசைப்படுகிறேன்
நீயாவது சந்தோசமாய்
இருக்கிறாயா என?

ஆம் என்றாலும்
வருத்தம்தான்!
இல்லையென்றாலும்
வருத்தம்தான்!
வேறு என்ன கேட்பதென்பது
கூட தெரியாமல் விலகி
மௌனமாகவே மழையில்
கரைகிறேன்.

கவிஞர் தமிழ்

# வாழும் வாழ்க்கை (இல்வாழ்க்கை)

**அதிகாரம் 5**

ஏழை எளியவர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும்
உறவினர்களுக்கும் உறுதுணையாக நிற்பது
இல்வாழ்க்கை வாழ்பவரே

இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் ஏன் இறந்தோருக்கும்
உற்றத் துணை இல்வாழ்வோனே

அன்பாலும் அறனாலும் ஒருவனின் பண்பாலும் வாழும்
அவன் வாழ்வு என்றும் பயனுள்ளதாகுமே

அறவழி வாழ்ந்தால் யாவும் கை கூடுமே
இவன் தலைசிறந்தவனாவனே

இவன் முற்றும் துறந்தோரை விட மேலானவனும் இவனே

பகிர்ந்து உண்டு பழிக்கு அஞ்சி
ஒழுக்கத்துடன் அறத்துடன் இல்வாழ்வு வாழ்பவன் வாழ்வான்

இவன் தேவர்களில் ஒருவனாகவும் ஆவானே

அகர முதல




கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# தங்கமானதங்கத்திற்கு பிறந்தநாள்

தங்கமான தங்கத்திற்கு பிறந்தநாள் என்
தங்கமான தங்கத்திற்கு பிறந்தநாள் நீ
தங்கத்தை விரும்பாத என் தங்கமே ஒரு
சிங்கப் பெண்ணாய் வாழ்ந்தபெண்சிங்கமே தங்கமே
நீங்கள் எங்கள் தங்கமே எங்கள் ஒளிவிளக்கே
எங்கள் குலதெய்வமாய் நிற்கிறாய் உன்
தங்க முகம் தந்த நல்சிரிப்பின் அன்பாலே வென்றது அது
எங்குமே கண்டுநின்று மகிழ்ந்து எல்லோரையும் வாழ்த்தியது

எல்லாமே உனக்கு சாதகமாய் இருந்தது
உன் நல்ல தரும குணமே அதை வென்றது
உள்ளம் எப்பொழுதுமே உனக்கு வெண்மை
அதனால் உன்னிடம் நான் இருந்தேன் தாசனாக

நீ நின்ற சபைகள் எல்லாம் உன்னை நின்று வாழ்த்தியது
நீ வாணியாக எங்குமே அமர்ந்தாய் என்னுடைய தேவியாக
நானும் உன்னை கண்டேன் அங்கு என் இதய ராணியாக
நின் பிறந்தநாளில் உனை வணங்கியே

வித்தியாபதி உன் இந்த தஞ்சைதாசன்
எத்தனை பாடல் எழுதினாலும் நீயே என் கவியே
அத்தனையும் உன் அன்பே எனக்கு தனி
இந்த தாசன் இதயக்கூட்டு நீயேஇருப்பாய் என் மகியே.

ராணியாகவே என்றுமே நின்றுமே
இன்னுமே பரணி பாடி உன்னை வாழ்த்தி
என் பணி கவியில் உனை
வணங்கி நிற்கிறேன்
வாணியாகவே என்
கவி ராணியாகவே




கவிஞர் அஞ்சல் தஞ்சைதாசன்,சென்னை 600 110

# நதி தேவதை

சீறிப்பாய்ந்தோடும் காட்டாறு வெள்ளம்
கிழக்கும் மேற்குமென தன்னுடலை விரித்து
நதியென பாய்ந்திட
தாகம் தீர்த்து இன்னும் பிற
தேவைகளையும் பூர்த்தி செய்தோடும்
நதிதேவதையின் கால்தடத்தில்
சேறும் சகதியுமாய் இளகி வடியும்
கரையில் பதிந்த கால்தடங்களின் மீது நின்று
கண்களை விரித்து காண்கிறேன்

வேகம் குறைந்து வயோதிக தோற்றத்தில்
பொலிவையும் இழந்து தத்தளித்து நகரும்
நீரின் அழகினை அடிமட்டத்திற்கும்
மேல்மட்ட வர்க்கத்திற்கும் சேராத
பெண்ணொருத்தி நுரை பொங்கியோடும் நீரில்
மனதின் வலியோடு
உள்ளுக்குள் மறைத்து வைத்திருக்கும் குமுறல்களையும்
வெளுத்திடும் ஆடையில் இருக்கும் அழுக்கோடு
அடித்து துவைத்து கரைத்துக்கொண்டிருக்க

மீன்களுக்காக கரையினில்
தவமிருக்கும் வெள்ளை கொக்குகளைப்போல
வெந்நிறத்துணிகள் வண்ணத்துணிகளோடு கொடியில்
கொஞ்சிக் குதூகளித்து காற்றில் அசைந்து
ஈரக்காற்றென வீசிய வெப்பக்காற்றில் உலர்ந்திட
அரை நிர்வாணக்கோலத்தில்
நீச்சல் பழகிடும் ஆசையில்
மந்தமாய் நகர்ந்திடும் நீரில் கைகளை ஆட்டியும் நீட்டியும்
ஆசைப்படகுகளில் மிதந்திடும் பிள்ளைகளின் மகிழ்வில் மகிழ்ந்து

ஊரார் உடையின் அழுக்கையும் கறையையும் அகற்றி
தன் வறுமைக்கறையினை நீக்காமல்
உச்சி வெயிலால் முகத்தினில் வடிந்திடும்
வியர்வைத் துளிகளை துடைத்து மகிழும்
சலவைக்காரி அம்மா நதிதேவதையாக - என்
விழிகளையும் நனைக்கிறாள்.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# லிமர்புன்

அட்சய திருதியை அன்று எல்லோரும் ஒரு மூட்டை அரிசி வாங்குங்கள். 1250/- ருபாய். ஆனால் ஒரு கிராம் தங்கம் 5500/-ருபாய். அரிசி வாங்கினால் விவசாயிகள் நலம் பெறுவர். நம் வீட்டிலும் வருடம் முழுவதும் சாப்பாட்டுக்கு பஞ்சம் வராது..தங்கம் வாங்கினால் சேட்டுகளும் பணக்காரர்களும் மேலும் பணக்காரர்கள் ஆகுகிறார்கள். அவர்கள் பணக்காரர்கள் ஆனால் ஒரு பலனும் இல்லை.

விவசாயி பணம் படைத்தால் விவசாயம் செழிக்கும்.சாப்பாடு கிடைக்கும். திட்டமிட்டு பரப்ப படும் செய்தியை நம்பி தங்கம் வாங்குவதை விட்டு விட்டு நெல்லோ அரிசியோ வாங்குங்கள்.

விவசாயம் காப்போம்...
# HMS Devaraj

அக்ஷயத் திரியை தங்கம்
ஐஸ்வர்யம் நமக்கல்ல கடைக் காரர்க்கே
ஏமாந்து போகாதீங்க சிங்கம்




#லிமர்புன் # Raju Arockiasamy

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# வறண்ட நிலமும் வறிய உழவனும்

நிலம் ஒப்ப நெஞ்சமும் இங்கே
சிலந்தி வலையாய்ப் பிளவுற்ற பாங்கே

வருந்தி விவசாயி வரட்சியால் நொந்து
வறுமைப் பசுமை பாலையாய் வெந்து

வண்டி மாடும் வினையாய் மாய்ந்து
தண்டனையாய்க் காடும் சருகாய்க் காய்ந்து



உண்டி இன்றி உயிர்கள் தாகித்து
கண்ட கொடுமையை உழவன் ஊகித்து

பயிர் வளர்க்க முகிற் பஞ்சிழுத்து
பசி போக்க வடமிட்டுப் பிழிந்து

வரவழைத்து மழை கசிய வைத்தே
வதனம் மலர வசிய வித்தை

புரிந்தே செழிப்புப் பெற்றிட நிலத்தை
புதிரை நீக்கிப் பொழிக்க அகத்தே

கொண்டிட்ட வைராக்கியம் சாதகம் ஆனதோ
மண் குடங்களும் நிறையும் தோதானதோ

வான அன்னை மனமுங் குளிர்ந்து
வாஞ்சையுடன் தாய்ப் பாலெனச் சுரந்து

மகனவன் பசிதீர அழைப்பை உணர்ந்தாள்
மண்ணுக்கு மழையாய் அன்பைப் பொழிந்தாள்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி (இலங்கை)

# குறுவரி செய்யுள்

புத்தகம்
வாசித்த ஒவ்வொருவரையும்
ஏதோ ஒரு வகையில்
செதுக்கிவிடுகிறது.

***

அவள்
கடந்து சென்ற நிழற்சாலை
சோலையாக உரு
மாறியது.

***

தொடர் வண்டி
அவளை மட்டுமே
நினைவு படுத்துகிறது!

***

கடற்கரை
அலைகள் கரையை
தழுவமாலே கடந்து
செல்கிறது!



கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# வேதனை அருகினில்

சொல்ல முடியவில்லையே வேதனைகளின் வேடிக்கைகள்
வஞ்சக மனிதப் பிறவியில் வருந்துதே பசி என்னும் பிணியில்
பணம் ஒரு பக்கம் மனம் ஒரு பக்கம் மாறுபட்டதே மனிதன் மாண்பு
கடைத்தெருவும் கடை கோடியும் ஓரிடத்தில் ஒற்றுமை இல்லையே
ஒவ்வாமை ஒவ்வொருவரிடமும் கவ்வுதே காலத்தில்
மாறுபட்ட மனமே மடமையில் மனித இனமே
நீரும் விலை போனதே நிம்மதியும் விலை தேடுதே
நீதி இல்லா நாட்டில் நம் பிறப்பும் ஒரு ஏட்டில்

****

எட்டிப் பிடிக்க முடியாத எண்ணங்கள்
தொட்டு பார்க்க முடியாத லட்சியங்கள்
கனவாகவே போகும் கனவுகள்
புறம் படும் நம்பிக்கைகள் அளவோடு ஆதிக்கம்
அர்த்தமில்லா வசந்தம்
உறவும் ஊதியம் ஆனதே
நயமில்லா வஞ்சக நட்பு
நாலு பக்கமும் நான்கு வித நயம்
அறமும் புறமும் அழிந்து போனதே
ஆசைக்கு ஓர் ஆவணம்
ஆளுக்கு ஒரு பாவனை
பங்கம் விளைவிக்கும் பாகுபாடு
பணத்துக்கு மட்டும்தான் மெய்ப்பாடு
பாசம் என்னும் வேச பூனைகள்
முகம் பார்க்கும் கண்கள்
வேடிக்கை உருவ இழிவு
உடன்படாத உள்ளம்
ஊரும் ஊதாரி
ஊதலும் வாய்ப்பாரி
நாளும் நமக்கில்லை
யாரால் எழுதப்பட்டது
பிறப்பு என்னும் தவறான ஏடு





இந்த வேதனைகளை மெய்பாடி
ஒவ்வொரு கணமும் வேதனையின் அருகினில்

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# அம்மா உயிரோடு இருந்திருந்தால்

இட்லிகள் ஆவிப் பறக்க இருந்திருக்கும்
சால மீன்கள் பத்தை நூறு ரூபாய்க்கு வாங்க வேண்டியது இருந்திருக்காது

வீட்டில் உள்ள பித்தளை வெண்கலப் பாத்திரங்கள்
வருடத்திற்கு ஒரு முறையாவது கும்பாபிஷேகம் கொண்டாடிருக்கும்

இத்தனை திருமண அழைப்பிதழ்கள் திறந்து பார்க்காமல் இருந்திருக்காது
தினசரிகள் மடிப்பு கலையாமல் இருந்திருக்காது

தொலைக்காட்சி பெட்டியை ஆன் செய்ததும் ஒலியும், ஒளியும் வர
கால் மணி நேரங்கள் ஆகியிருக்காது



இரண்டு ஆண்டுகளாய் செயல்படாமல் இருக்கும்
அந்த தரைவழி தொலைப்பேசி இணைப்பில் இருந்திருக்கும்

தென்னங்குச்சி மாரை எடுத்து இத்தனை முறை
தண்ணீரை வெளியேற்ற தேவைப்பட்டு இருக்காது

அம்மா உறங்கும் அறையில் உள்ள கட்டில்களும் நாற்காலிகளும்
கொஞ்சம் ஆளுமையாய் இருந்திருக்கும்

வீட்டு வாசலில் புதர்கள் மண்டி இருந்திருக்காது
வீட்டின் மேலே இருக்கும் புறாக்கள் இரைக்காக கீழே இறங்கி இருக்கும்

கண்டதும் சற்றென்று ஓடும் வெள்ளாடுகள் சிறிது நேரம் சுற்றி சுற்றி வரும்
காக்கை குருவிகள் கூட காலை உணவுக்கு வந்திருக்கும்

நெடுநாள் எரியாமல் இருக்கும் முகப்பு விளக்கு சரி செய்யப்பட்டு இருக்கும்
ஆம் அம்மாஉயிரோடு இருந்திருந்தால்
நானும் கூட ஒரு முறை மன்னிப்பு கேட்டிருப்பேன்

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# ஹைக்கூ கவிதைகள்

- விரிசல் விழுந்த நிலம்
  நீருக்காக யாசிக்கிறது
  பாலைவனம்.

- கரையில் படகு
  கையில் துடுப்பு
  வறுமை.

- வெள்ளை காகிதம்
  விற்பனை நிலையத்தில்
  தூரிகையின் கிறுக்கல்.



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# எண்ணம்

(அந்தாதி)

எண்ணம் போல் வாழ்வு
அமைய
திண்ணமாய் நாளும் நல்லதை நினை.

நினைத்ததைச் செயல்படுத்த
பயிற்சி தேவை.

தேவைக்கேற்ப வரவை
ஈட்டிட வேண்டும்.

வேண்டும் துணிவு
காரியம் ஆற்றிட

ஆற்றிடக் கிடைப்பது
செயலில் வெற்றி

வெற்றி பெற்றதும்
கொண்டிடுக பணிவு.

பணிவோடு இன்சொல்
பேசுவதே சிறப்பு.

சிறப்பீனும் செல்வம்
பெற்றதும் ஈந்திடுக.

ஈந்திடுக இரப்போர்
மகிழ்ந்திட உணவு.



உணவு உழவரின்
உழைப்பால் வருவது.

வருவதை எல்லாம்
செலவு செய்யாதே.

செய்யாதே பிறருக்குத்
தீமை தருவனவற்றை.

தருவனவற்றை அன்றே
நினைவிலிருந்து அகற்றிடுக.

அகற்றிடுக நெஞ்சத்தில்
இருக்கும் வஞ்சத்தை.

வஞ்சத்தை அகற்றிடுக
வாழ்வு சிறக்க.

சிறக்க வாழ்ந்திட
கொண்டிடுக நல்லெண்ணம்.

கவிஞர் செ.கலைவாணி,ஆஸ்திரேலியா

# தொலைந்த ஞாபகங்கள்

கனவுகளை சுமந்து அன்றாடம் பயணிக்கும்
இப்பெரும் வாழ்வில்
தொலைந்த ஞாபங்களை
நம் மனம் மூளையென்னும்
பெரிய கோப்புகளில் அடுக்கி
பத்திரபடுத்தியே வைத்திருக்கின்றது.

அளவில்லா நேசங்களையும் துரோகங்களையும்
காதலும் வலியையும் சுமந்த மனம்
ஒருபோதும் எதையும் தொலைத்துவிடுவதில்லை.


நாம் தான் அதை மறந்துவிட்டதாய் எண்ணி
வேறு எண்ணங்களில் செயல்களில் பயணிக்க ஆரம்பித்துவிடுகிறோம்.
இருந்தும்
அவ்வப்போது துளிர்விடும் பச்சையம் போல்
பசுமையாய் நினைவுகள் துளிர்விட்டு கொண்டுதானிருக்கின்றன.




கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# பிரார்த்தனை

முட்டாய்களுக்கான
பிரார்த்தனைகளை
முழு மனதோடு
முணுமுணுக்கும்
பட்டாம்பூச்சிகளின்
ரகசியங்களுக்காக
மட்டும்
இன்றும்
காதுகள் தீட்டிக்
காத்திருக்கின்றன
நந்தி சிலைகள்.



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# ஆண்கள்

உடலாலும் உள்ளத்தாலும்
வலிமையான வீரர்கள்
அன்பை யாசிக்கும்
உறவின் பாலங்கள்

தனக்கென வாழாது
தானீன்ற செல்வங்களுக்கு
தன்னையே அர்ப்பணிக்கும்
மெழுகுவர்த்திகள்



நெற்றி வியர்வை
நிலத்தில் சிதறிட
பற்றுப் பரிவுடன்
பாடுபடுகின்ற பரோபகாரிகள்

மனச் சுமைகளை
மனதுக்குள்ளே புதைத்து
நோய் நொடிகளின் போதும்
பொறுமை காப்பவர்கள்

குடும்ப மகிழ்ச்சியைத்
தலையில் சுமந்து
தரணியில்
ஓடிக் கொண்டிருக்கும்
கடுகதி ரயில்கள்

ஆண்களின் பலமும்
சளைக்காத உழைப்பும்
மண்ணில் பெண்கள்
மனம் குளிர்விக்கிறது

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# சிவக்கும் இதழில் வெட்கத்தின் சாயல்

மெல்லிய இடையை
கொண்டவள்.
சிவந்த இதழை
கொண்டவள்.
அம்பு போன்ற புருவம் கொண்டவள்.
தாமரை போன்ற
முகமலர்ச்சி
கொண்டவள்.
குளத்தகரையில் நீராடி
விட்டு நீர் எடுக்க
வந்தவள்.
மெய் மறந்து
உட்கார்ந்தாள்.
காதல் கொண்ட
அவள்.
மெய் மறந்தாள்.
மனத்தில் உலா
வந்த இளைஞனால்.
கற்பனையில் ஆழ்ந்த
அவள்.
எப்பொழுது எழுவாளோ
தான் உற்ற கற்பனை
உலகில் இருந்து.
இவள் உட்கார்ந்திருக்கும்
அழகே தனி
அழகு தான்.
இவள் அழகில்
லெட்சுமி தாயை
ஒத்து மிளிர்கிறாள்.



அழகே உருவான
இவள்.
மங்கையை மணக்கும்
மணாளன் யாரோ?
பெண்ணின் மனதை
புரிந்து கொள்வது
எளிதல்ல.
மங்கை நினைக்கும்
ஆண் மகனை
அவளே உரைத்தல்
மட்டுமே உண்டு.
இல்லையென்றால்
ரகசிய காதலனாகவே
அவள் மனதில்
இருப்பான்.

கவிஞர் சி. சிவப்பிரியா,பொன்செய்

# புரிந்திட வாய்ப்பில்லை

என்றாவது புரிந்து கொள்வாய்
என்றே இந்த நாள் வரை கழிந்தன.

எல்லையற்ற ஜாலங்கள்
எண்ணிலடங்கா வடுக்கள்.

நின் வார்த்தைகளால் குத்திக் கிழித்திட
நெருஞ்சி முள்ளாய் அகம் வதைக்க
நித்திரை தொலைத்த நெடுங்கடல் பயணமாய்
நீண்டதோ இரா வேளையும்.

உரிமையாய் உரியவளானால்
உதறிடுவாய் என்ற பயம்.

உரிமையின்றி தள்ளியே நின்றால் - என்
உறவடி நீ எனக்கு என உயிராகிறாய்.

நான் மொழிந்தால் சண்டைகளாய் வருதே
என ஒதுங்கி தான் நின்றேன்.

ஆயினும் வருந்திட வதைக்குதே
வடுச் சொற்களின் நினைவுகள்.

என்றேனும் அகம் படித்து புரிவாய்
என்றே ஒவ்வோர் நாளும் கடக்கிறேன்.



என்னவனின் வார்த்தைகளில் மீளாத நான்.
இன்றே மீளாமலே நிற்கிறேன்.
வெட்கி உமிழ்கிறேன்.

என் நிலை காண பிம்பத்திலே
இப்படி ஒருத்தியை எதற்கு மணந்தேனோ
என நீயும் வாடுகிறாய் வெறுத்த காதலால்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# கட்டுமரம்

இருள் எனும் போர்வையைப்
போர்த்திக் கொண்டது வானம்!
வைரத் துணுக்குகளாய்
கண் சிமிட்டிய தாரகைகள்!
கரை தெரியா தொலைதூரம்
நீரைக் கிழித்து எதிர் திசையில்
வாழ்வின் அலையைக்
கடக்க குடிநீரோடு
கட்டுமரம் ஏறிப் போகிறோம்!
அரைசாண் வயிற்றோடு போராட்டம்
இல்லையென்றால் அலையோடு
போக அவசியமில்லை!
மனிதனின் தடம் பதிக்க
கடலும் மாறியதே!
மூச்சை பிடித்துக் கை
சோர்ந்து போகும் வரை
வலை வீசி மீன் பிடிக்க
விடிய விடியத் தூங்கா இரவு!
வயிற்றுக்கும், உழைப்புக்கும்
காணாத மீன்கள்!
விசைப்படகில் வந்து அள்ளிச்
சென்றவனுக்கு யோகம்!
களைத்துப் போன மீனவனைக்
கருக்கலில் பத்திரமாகக்
கரை சேர்த்த கட்டுமரம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# நெஞ்சுக்குள்ள நெருஞ்சி முள்ளு

நெஞ்சுக்குள்ள ஓநெனப்பு
நெருஞ்சி முள்ளாக் குத்துதய்யா

உள்ளுக்குள்ள ஓநெனப்பு
ஊஞ்சல் கட்டி ஆடுதய்யா

ஒன்பேர சொல்லுங் கொலுசு
ஒன்ன காணாம சிணுங்குதய்யா

வாசலிலே பூக்கோலம் ஒன்னகாணாம
வஞ்சி என்ன ஏசுதய்யா

ஆத்தங்கர ஆலமரம்
அத்தான் ஒன்ன கூப்புடுதய்யா

சந்தையில சாமந்திப் பூஒன்னு
சந்தனமா நெஞ்சிலதான் காயுதய்யா

செங்குருவி தானய்யா ஏமனசு
செம்பருந்தா ஓநெனப்பு தொரத்துதய்யா

குருவநெல்லு கொட்டி வச்ச
குருதாட்டம் எம்மனசு ஆனதய்யா



மாங்கொளத்து கரைமேல காத்திருப்பேன்
மறக்காம நீ வந்து சேர்ந்திடய்யா

மச்சானே தாலிக்கொடி ஏந்திவாயா
மகராசன் ஒன்னோட வாழணுமய்யா

ஆவாரம் பூவெச்சு காத்திருக்கேன்
அரளிவெத முந்தானையில் சிரிக்குதய்யா

கவிஞர் தஞ்சை.கங்கை மைந்தன்

# விதியென்ன சதியோ!

மண்ணோக்கி,
மார்பு துடிப்பு நின்று,
மிச்சமான வாழ்க்கையை,
மீதி வாழவேண்டுமென்று,
முட்டிவரும் எண்ணத்தையும்,
மூச்சாலே இழுத்து பிடித்தாலே,
மெத்தனமாய்,
மேலுள்ளவனும்,
மையிருட்டு நோக்கி,
மொத்த வாழ்க்கை விட்டு,
மோளதாளத்துடன்,
மௌன படுக்கையில்,



மண்டியிட்டும்,
மனசாட்சி இல்லா,
மகா ஆத்மாவை,
மரணக் கிணற்றினிலே,
மென்னியில் கயிறுகட்டி,
மறிக்க வைக்கும்,
மனிதனின் விதியென்ன சதியோ!

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# உயிரின் தேடல்


களவாய் நுழைந்து
காதலில் உறைந்து
பழகிய நெஞ்சங்கள்
பால்மழை பொழிந்திட
விலகிய நெஞ்சங்கள்
விளக்காய் குளிர்ந்திட
பருகிய பருவங்கள்
பாசத்தை தொலைத்திட
அன்பாய் வாசம் கொண்டு
ஆறாவது வடுவாய் நிலைக்கொண்டு
இன்றளவும் இன்பத்தைத் துறந்து
ஈட்டியாய் உள்ளத்தில் பாய்ந்து
உண்மையின் உக்குரல்ள் விலகி
ஊமையாய் ஆனதே
எள்ளளவும் குறையாத காதலுக்கு
ஏமாற்றங்கள் ஏராளம்
ஒளிந்து கொண்ட திருமகளை
ஓங்கிய குரல்தனிலே
ஔடதத்தில் மயங்கி
ஃஎன்ற ஆயுதத்தில் விழ்ந்தேனே



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# அன்பு மகனே

அன்பு மகனே
நானும் உனக்கோர் அம்மாதானடா
நாளும் வருந்துகிறோம்
மீண்டும் உன்னைக் காண
மாண்டவனைக் காணமுடியாதென்று
அறிவுக்குத் தெரியும்
அன்பு அதனை அறியாமல்
ஆற்ற இயலாமலே அழுதுக்கொண்டிருக்கிறது
அக்காவின் மகனென்ற உறவில் நீ வாழ்ந்திருந்தாய்
எங்கே போனாயென ஏங்கித்தவிக்கிறோம்
கடமைகள் ஆற்ற வருவாயாயென
காத்துக் கிடக்கிறோம்
பத்து மாதம் சுமந்த வயிறு
பரிதவித்தே வாழ்கிறது
உன் புன்னகையின் அழகை
நினைத்தே தினமும் சாகிறது
மரணமுன்னை அழைக்கவில்லை மகனே
எழுந்து வந்துவிடு மகனே
தீயுன்னைத் தீண்டியபோது
சுட்டிருக்குமே
அழகு மகனே
மீண்டும் வந்துவிடு
கையறு நிலையில்
கண்ணீரும் வற்ற
உயிரற்ற மனதோடு
உயிரோடுதான் இருக்கிறோம்
இறந்த இதயங்கள்
உன்னை நினைத்து
இடையறாது துடிக்கிறது
வருவாயா நீயும்.



கவிஞர் அகிலா ஜெயராமன்,செந்துறை

# மௌனம் வாசிக்க பழகு!

பட்டாம்பூச்சி
இரசிக்கும் விழிகளை
பரிதாபமாக பார்க்கும்
"நான் நானாக"
வாழாத பாவப்பட்டது

மனநிலை சரியாக
இருப்பதும்
பக்குவக் கழுதை
கண்களில்
பரிதாபமே.

வாசிக்க
மனமில்லாத மனதிடம்
முட்களைத் தாங்கி
"மௌனம் "
காயம் பரிசு பெறும்.

காயமில்லா
காயமேதடா வென
வானவில் கண்டதும்
வளைந்த கழுத்தில்
வானம்கண்டு சிரிக்கும்

மௌனம்
வாசிக்கத் தெரிந்தவர்
மலர்க்கொத்து
தரும்வரை
"மௌனம்"
அது அதுவாகவே
இருக்கும்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கருவறை பந்தம்!

கருவறை பந்தம் காற்று புகமுடியாதா
அழகுசொர்க்கம்
வெளிச்சங்கள் தேவையில்லாத
வெள்ளியறை

இருளும் சூழ்ந்தாலும்
இதமான தாலாட்டில்
சுருண்டு சுகமாய் படுப்பேன்
என் தாயின் இசைக்கேட்டு
சுற்றிவந்து சுள்ளென்று உதைப்பேன்
சுவாசிக்க தடையேதுமில்லை

நேசிக்கும் என் அன்னையின்
மென் தீண்டலில்
என் காதுக்குள் அப்பாவின்
குரல் இனிதென ஒலிக்கும்
அறைவிட்ட வெளிவரும் நாள்
பார்த்து நான் காத்திருக்க

கொடிசுத்தி வந்ததால்
கொழுந்தனுக்கு ஆகாதன
மாலை சுற்றி வந்தததால்
மாமனுக்கு ஆகாதன

பெண்ணாய் பிறந்ததால் பெரும்
முகச்சுழிப்புக்கு ஆளாகி
மீண்டும் போய்விட என்மனமும்
ஏங்குது



என் தாயின் கருவறைக்குள்
சென்று பதுங்கிகொள்ள
திரும்ப போகமுடியாது
போனதே தாயின் கருவறை
அமைதியான அறையின் வாசம்

உணர ஏங்கும் மனம்
உணர்ந்தபின் ஏங்குதே
மனமும்
உணரத் துடிக்குதே மீண்டும்
மீண்டும் கிடைக்காத தாயின்
கருவறை

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி(நாகை மாவட்டம்)

# எல்லாம் சிவமயம்

எனக்குள் "நீ "இருந்தாய்
உயிரோவியமாய்..
உனக்குள் "நான்" இருந்தேன்
எழிலோவியமாய்..
விழியில் "நீ" இருந்தாய் ஒளியோவியமாய்.
விலகாமல் "நான் " இருந்தேன் நிழலோவியமாய்.
அருகினில் "நீ" இருந்தாய்
அழகோவியமாய்.
தொலைவில் "நான்" இருந்தேன்
இருளோவியமாய்.
கனவில் "நீ" இருந்தாய்
கலையாத ஓவியமாய்.
நினைவில் "நான்" இருந்தேன்
அழியாத காவியமாய்.
உயிரில் "நீ" கலந்திருந்தாய்
சிவமயமாய்.
நினைவில் "நான்" இருந்தேன் நிர்கதியாய்.
சிவமே சிவமே"நீ" இருந்தாய்
என் அகத்துள் இருந்து வழிநடத்திடுவாய்.
தவமே தவமே "நான்" இருப்பேன் உன்னுள் வந்து
சரணாகதி அடைந்திடுவேன்.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# தலைநகர்

முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த
மூவேந்தருள் ஒருவனாம் தென்னவன் தலைநகர்;
முக்கண்ணன் தேவியாம் உமையவள் மலையத்துவம்ச
பாண்டியன் பைங்கொடியாய் அங்கையற்கன்னி மீனாட்சியாய்
பைந்தமிழ் பேசும் மதுரையம்பதி வந்திருந்து
பாண்டி நாட்டை ஆண்டு காட்டினாள்!

மனையாளை மீண்டுமொருமுறை மணம்முடிக்க வந்தாரீசன்
மண்ணுக்கு மன்னுயிர் யாவையையும் சொக்கவைக்க
சொக்கநாதராய் சுந்தரேஷ்வரராய் சோம சுந்தரராய்;
சித்ரவர் ஆடிய திருவிளையாடல் அறுபத்துநான்கென
சித்திரித்தார் பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணத்தில்!



மணமக்கள் பாண்டி நாட்டை ஆண்டணர்
மாண்புடன் ஆறு ஆறு மாதங்கள்;
இன்றும் அடியார்கள் எமக்கு அரசனுமரசியும்
இறைவனும் இறைவியுமே யதனால்தான் இன்றும்
மதுரையம்பதி செங்கோல் மாற்றும்விழா காண்கிறது!

அல்லங்காடி நாளங்காடி கொண்ட பண்டையநகரம்;
ஆறிலுயர் வையைத்தவழ்ந்து வாழ்வித்த நகரம்;
வையமிதில் பழம்பெருமை மிகுந்த நகரமிது!
வந்தவரையெல்லாம் வாழ்விக்கும் தமிழ்நாட்டின் தலைநகராய்
விளங்கிட முழுதகுதியும் பெற்ற நகரம்
தமிழ்நாட்டின் தூங்காநகராம் மதுரையே ஆகுமென்பேன்!

மீனவர் குப்பமாம் சென்னையை நகராக்கி
மீனவன் தலைநகரை இழிவுபடுத்தியதை என்னென்றுரைப்பது?
சென்னையைச் சிங்காரச் சென்னையாக்கி மகிழ்வதைவிட
செங்கோல் வளைந்ததை நேர்செய்ய தன்னுயிரீந்த
மீனவன் தலைநகரை சிங்காரம் செய்யலாமே!
சிங்காரச் சென்னை உருவாக்க ஆண்டாண்டாய்
சென்னைவாழ் மீனவர்கள் வாழ்வாதாரத்தை அழிக்காது
சென்னையை மீனவர் குப்பமாய் வாழவிடலாமே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# மண்ணின் மூச்சு

சில்லரை இல்லா சிறுவயதில்
வேடிக்கை பார்க்க உப்புக்கிணறு
தேடிப் போவேன்.
தென்னை மரங்கள் சூழ
மேயும் மாடுகளில்
கொக்குகள் இளைப்பாற
ஓடும் மோட்டாரில்
உடையோடு நானும் வெளுப்பாக
மாலை வரை தோட்டத்தில்
பறவைகளை ரசித்து நிற்க
ஒரு பொழுதும் விரட்டியதில்லை
தோட்டக்காரர்.
கல் நட்டு கம்பி வேலி இட்டு
சிறையெனக் கிடக்கும்
தோட்டத்தைக் கடக்கையில்
கண்ணீர் வடிக்கிறது
மண்ணின் மூச்சு.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# இயற்கை

எல்லாமும், எப்போதும், எல்லோருக்கும்
கிடைக்க கூடிய அரிய பொக்கிஷம் இயற்கையே!
காலம் காலமாகத் தொடரும் இத்தொடர்,
எல்லா உயிர்கட்கும் பொதுவான ஒன்றே!
ஆறு வகை காலங்களாக நமக்கு
இயற்கை தந்திருக்கும் இக் கொடை
மழை, வெயில், காற்று, பனி இவையாவும்
உயிர்களுக்கான வாழ்வியலின் வசந்தங்களே !
சில நேரங்களில் சீற்றத்தால் தான் உயிர்கள்
சிதைந்தும், அழிந்தும், மடிந்தும் போகின்றனவே!
சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களும்
பூகம்பங்களும், அதிகமான மழையால்
அடித்துச் செல்லும் நாடு நகரங்களும்,
ஏன்? மனிதர்களால்
உண்டாக்கப்படும் நெகிழிப் பொருட்களால்
தூய்மையாக பாய்ந்தோடிய நதிகள் மாசுப்பட்டும்.
மண்ணில் இரசாயினம் கலந்த உரங்களால்
விளைவித்த தானியங்கள், காய்கறிகள் உண்டு
பல வித நோய்களும் வர காரணமே.
இயற்கையே நமது பொக்கிஷம்.
இயற்கை அன்னையை பூஜிப்போம்!
நேசிப்போம்!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை,(கிருஷ்ணகிரி மாவட்டம்)

# விழியோரக் கனவு

யோசிக்காத உயிர்களும்
நேசிக்காத ஜீவனும்.
இயல்பாய் தடையில்லாமல்
சுயவாழ்வு நடக்கையிலே.

உழைப்பை உயிராய்
கொண்டவனுக்கு
துயில் கொள்ளும்
வேளையிலும்
முன்னேற்றமாய் பெற
விழியோரக் கனவு.



சிந்தையைத் தூண்டி
சிகரத்தைத் தீண்ட
முயற்சிக்கும்.

மனித சக்தியின் மாமுயற்சி
நம்பிக்கையின் பிரதிபலிப்பு
ஒவ்வொரு நாளையும்
புத்தொளியாய் வீசும்

நன்னாளாய் பார்ப்பவனுக்கு
வெற்றி ஏணிப்படிகள்
மெய் பிம்பங்களாய்
காட்சியளிக்கும்

நினைவுகள் நிஜங்களாக
உத்வேக சக்தியை
தூண்டும் துணையாகும்
விழியோர கனவு.

கவிஞர் ஞா.போனிபாஸ்,கடலூர்

# சாகசங்கள்

வாழ்வை அதன் போக்கில்
ஏற்றுக் கொண்டு வாழக்
கற்றுக் கொள்ளும்
வித்தையே ஒரு
சாகசக் கலை
எனச் சொல்வோம்!
விரும்பிய வாழ்வு
கிட்டாவிடினும் கிடைத்த
வாழ்வை ஏற்றுக்
கொண்டு நம் வழியே
சென்று எல்லையைத்
தொடுவதும் ஒரு
சாகசமே!
பொய் பேசிடும்
உறவுகள் மத்தியில்
உண்மைக்காகவே
வாழ வேண்டும் விதிக்குக்
கட்டுப்பட்டு வாழ்ந்திடும்
ஒவ்வொரு மனிதரும்
சாகசம் புரிபவர்களே!
எவராலும் ஏற்றுக் கொள்ள
முடியா பணிகளையும்
ஏற்றுக் கொண்டு
அதற்கெனவே தம்
ஆயுளையும் செலவழித்திடும்
அத்துணை நபர்களும்
சாகசம் புரிபவர்களே!



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# மருட்சி

எதிர்வீட்டு மனையினில்
ஆற்றுமணல் மழையினில்
நத்தையெனச் சரிந்துருளுகிறது
ஆடிப்பெருக்கின்று;

காவதத்தில் காவேரியில்லை;
மாவட்டங்கள் கடந்தேகித்
திருச்சியடைய நுழைவுச்சீட்டுமில்லை;



கல்கியின் புதினத்தை மடியினில் கிடத்தி
விசாரக் கண்ணூற்றில் வீழ்ந்த துளிகளில்
கரம்நீட்டிப் பின் சிரம்நீட்டியோர்க்குக்
கரமீட்டி உயிர்கொடுத்தேன்;

சூழ்ந்துகொண்ட சோழ மறவர் கூட்டம்
யானைகள் கேட்டது மரக்கலம் கேட்டது;

மகனின் மாமிசக்கதையை
சிறுதொண்டர் சிரித்துரைத்தார்;
காவேரி அகலம்
அகாலமாய்க் குறுகியதாய்
மீசையில்லா பழுவேட்டரையர்
ஆதித்த கரிகாலன் ஆவியுடன்
அழுதுரைத்தார்;

குந்தவை சிரித்திருக்கையில்
வானதி வெம்பத்துவங்க
வானமும் வரலாறும் அழத்துவங்க
மண்வாசத்துடன் கரைந்தவர்கள்
நுரையீரலுக்குள் துளசிவாசமாயினர்;

ஆபத்துதவிகளும் ஆழ்வார்கடியானும்
எங்கேனும் மறைந்திருந்திருக்கக்கூடும்!

அந்நேரமொரு அலைபேசி அழைப்பு!
கல்கிக்குக் காசனியென்று என்னிடம்
அவரே அறிவித்து மரிதுப்போனார்;
அந்தோ ஆடிப்பெருக்கின்று.

கவிஞர் தயானேஸ்வரன், வில்லிவாக்கம்,சென்னை - 49

# தொலைந்த ஞாபகங்கள்

தொலைந்த ஞாபகங்கள்
தொடர்ந்தும் நினைவில்.
முப்பொழுதிலும்
முடிவிலியாய்.
உன் விழிகளில் தொடங்கிய
புன்னகையால்
இதயம் முழுவதும்
தேவநிலத்தின் படர்கொடியாய்
அவை
வியாபித்துக் கிடக்கும்.
அங்கேதான்
என் ஆன்மா கலந்த
கவிதைகள் எழவாரம்பிக்கின்றன
காலத்தின் நெடுகிலும்
அவை
அருவியாக ஓடிக்கொண்டே.
விழிகளின் பின்னால்
அந்த விழித்திரையிலும்
உன்னிசையின் நர்த்தனங்கள்
புள்ளினங்களின்
சிறகோவியங்களாய்ச்
சலசலத்துச் சப்தமிட்டபடி
காட்சிகளின் சாட்சிகளாகும்.
தொலைந்த ஞாபகங்கள்
இதயத்தின் பதுங்குகுழிகளில்
எப்போதும்
பாதுகாப்பாகத்தானிருக்கின்றன
தொலையாமல்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# நீர்த்திவலை

நீரில் அசைகிறது
நிலா

வானிலிருந்து
வந்த பயனையடைந்தது
மழைத்துளி

உன் விழி அசைவுக்கேற்ப
இசைவு கொடுக்கிறது தென்றல்

சிறு நதியாய்
பிரவாகமெடுக்கிறது
சின்னஞ்சிறிய வானம்

தெருவெங்கிலும்
கூத்தாடுகிறது
மெல்லிய அலைகள்

தஞ்சாவூர் பொம்மைகள் போல
தலையாட்டி சிரிக்கிறது
அந்த வெண்புறா

உன்னுள்
என்னைப்போலவே
உடைந்து உயிர்ப்பிக்கிறது
நீர்த்திவலைகள்



எனக்குத்தான்
வெகு நேரமாகிவிட்டது
நீ "காகிதக் கப்பல்"தான்
விடுகிறாய் என்பதை
நம்புவதற்கு!

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# உன் ஞாபகங்கள்

இருளுடன் போராடி
இரவின் கடைசி நிமிடங்களில்
வருகிற பஸ்ஸிலேறி
மூச்சுவிடும்போது
அலைபாயுமம்மா
அந்த நாள் ஞாபகங்கள்.



ஆறுமுழச்சாரியை
அழகாய் மடித்துடுத்து
அருகில் வந்து நிற்பேன்
என் நீண்ட கூந்தலை
நீவி நீ பின்னிவிடவேண்டி.
பின்னிமுடித்து பின்னால் வந்து
உணவுப்பொதியை பையிலிட்டு
வழியனுப்பிய பொழுதுகள்.

அதிகாலையில் அரக்கப்பறக்க
குசினிவேலை முடித்து
குளித்து வந்து ஈரக்கொண்டையை
வரிந்து கட்டி மீதிவேலை
முடித்து நான் செல்கையில்
முந்திக்கொண்டு வரும் தாயே
அந்த நாள் ஞாபகங்கள்.

என் ஈரக்கூந்தலை நீ துவட்டி
விரல்களால் கோதிவிட்டு
விதம்விதமாய் பின்னிவிட்ட நாட்கள்!
கடிகாரமுள் டிக் டிக்கென்றடிக்க
திக் திக்கென்றடிக்கும் மனசு.
அதிகாலைப்போராட்டங்களோடு!
அலையேன வரும் உன் ஞாபகங்கள்.

நீ சமைக்கும் சோறு
தொட்டுச்சுவைத்திட நாவூறும்
அமுதமன்றோ தாயே!
காலைப்போராட்டத்தில்
கால்கள் நிலத்தோடு போராட
கறிசட்டியும் கருகிப்போய்விடும்
கூடவே ஒட்டிக்கொள்ளும்
உன் ஞாபகங்கள்.

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்

# எழுந்து நில் துணிந்து சொல்

அச்சம் தவிர்த்து
அஞ்சா நெஞ்சோடு
ஏளனமாய் பார்த்திடும் அற்பர்முன்
தூணாய் நிமிர்த்திடு



சத்தியம் வெல்ல
சமத்துவம் பேசு
நித்திலம் நீதியும்
நிலைத்து நிற்கட்டும்

வரும் தீமைகளை
வலியோடு மறைக்காதே
வெறுப்போடு வெந்தெழுந்து
வேடங்கள் களைத்திடு

அடக்கிட நினைக்கும்
அற்பர்களுக்கு அஞ்சாதே
முடக்கிட நினைத்தால்
முழுநிலாவாய்த் தோன்று

பணிந்து குருகி
பரிதவித்து வாழாதே
வேங்கைப் புலியாய்
வெறியோடு தாக்கு

உன்னாலும் முடியும்
உண்மைகள் சொல்வதற்கு
பெண்ணாலும் இயலும்
பெண்ணடிமை தகர்த்தெறிந்திடவே

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# ஸ்ரீதேவி

லக்ஷ்மியர்கள் எண்மரென அஷ்டலக்ஷ்மி ஆவாரே!
கஜஆதி ஸந்தான தநதாந்யம் விஜெயவீர
மஹாலக்ஷ்மி என்றுரைப்பர்! பதினாறு பேறுபெற்று
பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துரைப்போம்! எண்ணிரண்டு
சேய்களல்லர்! செல்வங்கள் ஈரெட்டு என்றுரைப்பர்!
செந்தாமரைச் செல்வியவள்! அலைமகளும் அவள்தானே!
செல்வத்தின் பெருங்குவையே அவளுடைமை ஆனதனால்
மாலவன்தான் வேண்டுவார்க்கு வேண்டுமட்டும் வேண்டுவன
அட்டின்றி வழங்குகின்றான்! அன்னவட்கு தோத்திரமும்
ஸ்லோகமதும் மந்திரமும் பாடல்களும் அஷ்டோத்ரம்
ஸதநாமா வளியெல்லாம் அவட்குண்டு! கனகதாரா
ஆதிசங்கரர் யாத்ததுவும் நற்கருணை வேண்டியதே!
வேறுபெயர் பதிநான்கு பொருள்பொதிந்து உற்றவளே!
பசுமைபடர் மேனியழகு "ஹரிணி"யாமே! கதிரொளிக்கு
ஒப்பானதால் "சூர்யா"வே! பொன்னின்நிகர் அவளென்றே
"ஹிரண்மயீ"யே என்போமே! நிலாமுகத்தாள் என்பதனால்
"சந்திரா"வே அன்னவளே! நிலைதவறா தன்மையினால்
"அனபசாமுனிம்" என்றமைவள்! நீரினிலே தோற்றமவள்
என்பதாலே ""ஆர்த்திரிகி" தாமரையில் நல்வாசம்
பெற்றதனால் "பத்மஸ்திதா"! கமலமலர் நிறத்தாலே
"பத்மவர்ணா"! சூர்யகாந்தி உடைமையால் "ஆதித்ய
வர்ணாவே"! கூவாத்தில் தோற்றத்தால் "வருஷோபில்
வ"ப்பேரே! பெருகுகின்ற பசுச்செல்வம் என்பதனால்
"கர்ஷிணியே"! யானைகள் வணங்குவதால் "புஷ்ஷிணியே"!
செம்மைநிறம் கொண்டதனால் "பிங்கள"ப்பேர் அவட்குண்டே!
தர்மத்தின் தேவதையே என்பதனால் "யங்கிரிணி"
என்றமைந்த பல்வேறு பேறுடையாள்! வரலக்ஷ்மி
விரதமுண்டு! லக்ஷ்மிதனது கடைக்கண்நோக் குவேண்டுவதே!
செல்வர்க்கு அழகென்பர் செழுங்கிளையைத் தாங்குவதே!
ஈதலறம் மிக்கோராய் நீணிலத்து நீடுவமே!



கவிஞர் கணக்காயன்(இ சே இராமன்)

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# புல்லாங்குழல்

மயக்கும் குரல் கொண்டாயே
மாயவனின் கரங்களில் தவழ்ந்தாயே

மரத்தினால் உருவந்தனைப் பெற்றாயே
மாய இசையால் அனைவரையும் மயக்கினாயே

மனதிற்கு இன்பமதை அளிப்பாயே
மாசில்லா இன்பமதை தருவாயே

அகிலமும் விரும்பிடுமே உன்னில் வரும் இசைதனையே
ஆசானாய் மாறுகிறாய் கற்றுக் கொடுப்பதிலே

இன்னிசைதனை இன்பமாய் கொடுக்கிறாய்
ஈகையுடன் இசையாய் மாறினாய்



உன்னதமாய் பாடல்களைக் கொடுத்திடுவாய்
ஊரார் போற்றிட இசைதனை அளித்திடுவாய்

எங்கிருப்பினும் உனது ஒலி கேட்டிடுமே
ஏகலைவனின் கரங்களில் தவழ்ந்திட்டாயே

ஐயமில்லை நீ இருக்க இசை இல்லை என்று
ஒய்யாரமாய் அமர்ந்தே ரசித்திடலாம் உன் இசையை

ஓதுவதற்கும் நின் இசையே உயர்வாகிப் போகுதே
ஔடதமாய் நின் இசை பரவட்டும் எங்கெங்குமே

அஃதாகிய புல்லாங்குழலே வாழ்த்திடுவேன்
உன்னை நானுமே

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

அகர முதல
அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# இயற்கை

கண்களை கணமும் களவாடுது
பச்சை பசுஞ்சோலை!
தொடாமல் தொட்டு உறவாடுது
வானின் கார்மேக சேலை!

இயன்றவரை ரசிக்கிறது
மழை முகில் திங்கள்!
இயலாமல் என்றும் தவிக்கிறது
அலை மோதும் கடல்!



உயிர் தந்த இறைவனின்
அழகை கூறும் சொல்லழகி!
மனிதனின் கரம் படாத
வெளிர் நீல பட்டழகி!

இயற்கையின் அழகு சிறையில்
என் மனமோ நிரந்தர கைதி!
கொஞ்சம் அடைபட்டால் தெரியும்
இறைவன் சொல்லும் செய்தி!

வானவில் குடி இருக்கும்
பூமியின் நிரந்தர தேவதை!
இவளை இமையென காப்பது
ஒவ்வொரு மனிதனின் கடமை!

உறங்காத மழை முகிலே
உன்னோடு கை கோர்க்கவா!
இரங்காத மனித இனமே
என்னோடு இயற்கை காக்க வா!
உறங்காத மழை முகிலுடன்

கவிஞர் அனல் நிலவன்,கொசவபட்டி,திண்டுக்கல்

# வெற்றி மீது வெற்றி வந்து

வானமே எல்லையென்று
வாழ்க்கையில் திட்டமிடு!
எண்ணித் துணிந்து
திண்ணமுடன் முயன்றிடு!
வெற்றுப் பேர்வழிகளின்
விமர்சனங்களைப் புறந்தள்ளு!

பொருள், கருவி, செயல், காலம்
இடமென்னும் ஐந்தினையும்
கருதிச் செயலாற்று!
இலக்கினை அடைவதை
இலட்சியமாய்க் கொண்டு
எட்டுத் திக்கிலும்
வட்டமிட்டுப் பறந்திடு!

திறன்களை வளர்த்திடு!
திறவுகோல் அதுவொன்றே!
தடைகள் எதுவரினும்
தயங்காமல் எதிர்கொள்!
தளரா முயற்சியினால்
தடைகள் உடைபடுமே!

நம்பிக்கை என்பதே
உந்தன் பலமென்று நம்பு!
நறுமண மலரோடு
உடன்பிறந்த முள்ளிருக்கும்!
உறுதியுடன் முயன்றால்தான்
உன்கையில் மலரிருக்கும்!



மலையைக் கண்டு
மலைத்து நிற்காதே!
அலைபாயும் மனத்தை
அடக்கி ஆண்டிடு!
சிகரத்தில் ஏறிவிட்டால்
உயர்ந்தமலை உன்காலடியில்!

காலம் கனியும்வரை
காத்திரு! முயன்றிடு!
நாளை ஒருநாள்
நம்நாள் என்றாகும்!
உலகம் பாராட்டும்!
உனைக்கண்டு வியந்திடுமே!

வெற்றிக் கனிவந்து
வீழ்ந்திடுமே கைகளிலே!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# வாயிலார் நாயனார்

இறைவழிபாடு இரு வகை புறவழிபாடு அகவழிபாடு
குறைகள் தீர்க்க  கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம்
திறை கட்டுவதுபோல் உண்டியலில் காசு போடுகிறார்கள்
மறைக்காமல் மனம் திறந்து இறைவனிடம்  புலம்பல்.

பக்தி வழிபாட்டில் இறைவனிடம் முக்தி கேட்பதில்லை
பக்காவாக பேரம் பேசுவது "இதைத் தர்றேன்  அதைக் கொடு
சக்தி இருப்பவன் அள்ளிக் கொடுக்கிறான் பொன்னும் மணியும்
தக்கவர்க்கு இறைவன் அருகாமை தரிசனம் சாத்தியமாகிறது

இல்லாதவன் எங்கோ நின்று கன்னத்தில் "அரோகரா" போடுகிறான்
இல்லாதவனும் இருப்பவனும் இறையிடம் வியாபாரம் பேசுகிறான்
செல்லாக் காசாக பொல்லாத  ஆசையை அடைய அலைகிறான்
"எல்லாமும் வேண்டும், தனக்கு மட்டுமே வேண்டும் தா இறைவா"

என்னவேண்டுமானாலும் செய்வான்; எண்ணியது ஈடேற வேண்டும்
தன்னலமே பெரிதாக, காணும் யாவும் கைக்குக் கிடைக்க வேண்டும்
சொன்னபடி மொட்டை போடுகிறான் கேட்டது ஏன் கிடைக்கவில்லை
அன்னதானம் உபயத்தில் பேர் எழுதி  பேர் எழுதி பக்திமானாகிறான்

"ஆசை தோசை அப்பள வடை" விளையாட்டு சொல்லாடல் உண்டு
மீசை வளர்வது போல் தேவைகள் வளரும்  நவீனமயமான வாழ்க்கை
பாசையில் கால் வைத்தால்  குளத்தில் மூழ்கி  மூச்சுத் திணறுவான்
பாச வலையில் சிக்கிப் போராடுபவனின்  இறை பக்தி புறவழிபாடு



அன்றைய பக்தர்கள் இறைமீது வைத்திருந்த  பக்தி அகவழிபாடு
இன்றுபோல் அதுவேண்டும் இது வேண்டும் கேட்கவில்லை
என்றும் இறையிடம் காதலாகி கசிந்து கேட்டது முக்தி ஒன்றே
"மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிப்போற்றி"

அகவழிபாட்டின் மூலம் சிவனடி சேர்ந்தவர்களில் ஒருவர் வாயிலார்
பகலவனுக்கு தன் மனதில் கோயில் கட்டினார் பூசலார் போல்
சுகவழிபாடு இதுவே, ஈசனை மனதுக்குள் வைத்து பூஜித்தார்
தகதகவென சிவனை  ஒளி வடிவமாக உள்ளத்தில் வைத்தார்

சென்னையில் உள்ள  மைலாப்பூர் இவர் அவதரித்த திருத்தலம்
தன் மனக்கோயில் ஒளியாக  அவர் ஞானமே சுடர் விளக்கானது
தன் மனதில் எழும் பேரானந்தமே அவர் கண்ட திருமஞ்சனம்
தன் மனக்காதலே ஈசனுக்குப் படைக்கும் திரு அமுது ( பிரசாதம் )

அன்று இருந்தது உள்ளத்தை உருக்கிய உண்மையான பக்தி
சமயக் குரவர்கள் நால்வரின் வேண்டுதல் இறைவனடி சேர்தல்
சமய வழிபாடு நாயன்மார்கள் வேண்டுதல் இறைவனடி சேர்தல்
சமய அடிகளார் அனைவரும் வேண்டியது இறையடி சேர்தல்

மகாபாரதத்தில் சகாதேவன் கண்ணனை தன்மனதில் சிறைவைத்தான்
மகா தபோதனர் வாயிலார் இறைவனை தன் மனதில் சிறைவைத்தார்
சிகரம் வைத்தது போல் இறைவன் வாயிலார் மனதில் குடிகொண்டார்
அகவழிபாடு மூலம் தினம் மனதில் பூஜித்து  இறைவனடி சேர்ந்தார்

கவிஞர் ந.திருக்காமு

# திருநங்கை

இனி
திருநங்கையென்றே
எண்ணாமல்
அரும்நங்கையென்றே
உன்னை எண்ணிடு.

பிறப்பொரு முறைதான்
என்றெண்ணி.
இறக்கும் முன்னே
எதாவது செய்திடு.

இல்லையே கருப்பை என்று ஏங்காதே?
இரைப்பையுண்டு தளராதே.

எல்லை இல்லாத
உலகினிலே.
எத்தனை வாய்ப்புகள்
உள்ளதென்று.
உணர்ந்து நீயும்
தேடிடு.



பாலினம் மாறியதென்று.
கேலி செய்து சிரித்தாலும்.
வேலியிட்டுத் தடுத்தாலும்
காளியென்றே
உன்னை எண்ணிடு.

வேறுபட்டு உன்னைப்
படைச்சாலும்
மாறுபட்டு நீயும் வாழ்ந்திடு.

எள்ளி நகைத்துச்
சிரிச்சாலும்
கிள்ளியெறிந்து நகர்ந்திடு.

ஒழிந்து மறைந்து
வாழாமல்.
ஓதுமிடமே சென்றிடு.
உன்னால் முடியும் நம்பிடு.

கல்வி கற்றே
கால்பதித்திடு.
கலைகள் பலவும் கற்றிடு.

(திரு)நங்கையென்றே
நகைப்பவர்கள் முன்னே
வியக்குமளவு எழுந்திடு.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# தாய்ப்பால்

தாப்பாலே சிறந்தது
தரணியில் என்றும்
தரமான சத்து
தாங்கியே நிற்கும்

தாயின் பாசம்
தந்திடும் உணவு
தாளாத நிலையது
தார்ப்பரியம் நிறைந்தது



தன்னிகரிலாச் செல்வம்
குழவிகளின் அமுதம்
குன்றாத தூய்மை
குறையில்லாப் பெருமருந்து

நோயெதிர்ப்பு சக்தியது
நோயிலிருந்து காப்பது
நெருங்காது எழுந்திடும்
நுண்ணுயிர் அகற்றிடும்

அன்பென்னும் தேன்
அளவிலாது கலந்து
அரும்பாடு சுவையுடன்
அமுதமான வெண்பால்

அழகான தாய்ப்பாசம்
அள்ளிச் சொரியுதே
அருவியாய் குருதியை
அவள் தாய்ப்பாலாக

உணர்வின் துடிப்பு
உள்ளத்தில் மகிழ்ச்சி
ஊற்றாய்ச் சுரக்க
ஊறூமே தாயன்பு

மழலை வாயிலேயே
மகத்துவமாய்ச் சேரும்
மணக்கும் என்று
மகிழ்வில் குழவி

கவிஞர் ஜெயா ஸ்ரீ

# கிராமியக் கவிதை

வருசநாட்டுக் கருத்தமச்சான்
புருசனாக வேணுமுன்னு

வருசநாட்டுக் கருத்தமச்சான் புருசனா வரணுமுனு
வருசம்புள்ளா குலசாமிய கும்புட்டு வாறேன்

பெண்ணுகேக்க மொறமாமன் முந்திக்கிட்டு வரணுமுனு
வேணியம்மா கோயிலுல வெளக்கேத்தி வேண்டியிருக்கேன்

பரிசம்போட்டு பாதிப் பொண்ணாட்டியா ஆக்கணுமுனு
மாரியாத்தாளுக்கு மாவெளக்கு நேத்திகடன் போட்டுருக்கேன்

முறுக்குமீசக்கார மாமா மூணுமுடுச்சு போடணுமுனு
கருப்பசாமி கோயிலுக்கு காசு முடுஞ்சு வைச்சுருக்கேன்

கட்டழகன் கண்ணு கலங்காம பாத்துகணுமுனு
பட்டாளம்மாளுக்கு பூக்குழி இறங்குறேனு வேண்டியிருக்கேன்

காளியாத்தாளுக்கு முளப்பாரி எடுக்குறேனு சொல்லிதூங்கயில
காளயன்தான் புருசனாவருவானு கனவுல சொல்லிட்டாளே!



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# மரு சு.டேனியல் கவிதைகள்

மலர்ந்து, மணந்து பின்
மடியும்
மலர்களைப் பற்றி
செடிகள் கவலைப்படுவதில்லை.

பிறந்து, சிறகடித்து பின்
பறக்கும் பறவைகளைப் பற்றி
கூடுகள் கவலைப்படுவதில்லை.

கலந்து, காயம் செய்து
பின் கலைந்து செல்லும் உறவுகளும்
வலிகளை அறிவதில்லை.



கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீரிருப்பு

# ஹைக்கூ

அமைதியான நிழல்
சிறிதும் கலைக்கவில்லை
அழகிய பறவை.



கவிஞர் அ.செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# எழுத்தாளர் அ. வெண்ணிலா

## (கட்டுரை)

### பிறப்பு:



10 ஆகத்து 1971) தமிழக எழுத்தாளரும், கவிஞரும் ஆவார்.கவிஞர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், ஆசிரியர், சிறு பத்திரிகை ஆசிரியர் என பன்முக ஈடுபாடுகளுடன் தமிழ் உலகில் இயங்கிவருகிறார்.பெண்ணியம் சார்ந்த கருத்துகளை முன்னெடுத்து இலக்கியம் படைத்து வருவது வெண்ணிலாவின் தனித்துவமாகும். அன்றாட வாழ்வின் இன்னல்களை புனைவுகள் ஏதுமின்றி படைப்பாக்குவது இவரது ஆற்றலாகும்.

இவர் எழுதிய படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், இந்தி என பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி அளவிலான பாடத்திட்டங்களில் பாடமாகவும் இடம்பெற்றுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்தின் சமச்சீர் கல்வி பாடத்திட்டக் குழுவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி புதிய பாடப்புத்தக உருவாக்கத்தில் பங்களிப்பு வழங்கியுள்ளார்.

### வாழ்க்கைக் குறிப்பு:

சி.அம்பலவாணன்-வசந்தா தம்பதியருக்கு ஒரே மகளாக 1971-ஆம் ஆண்டு ஆகத்து மாதம் 10-ம் தேதி வெண்ணிலா பிறந்தார். ஐந்தாம் வகுப்பு வரை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும் ஆறாம் வகுப்பு முதல் ஆசிரியர் பயிற்சிப் படிப்பு வரை வந்தவாசியிலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் படித்தார். கணிதப் பாடத்தில் இளநிலை பட்டம் பெற்ற இவர் பின்னர் உளவியலில் முதுநிலை, வணிகவியலில் முதுநிலை பட்டங்களை பெற்றதோடு தொடர்ந்து கல்வியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவரது கணவர் மு. முருகேசும் தமிழ் இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்து இயங்கிவரும் முக்கியமான கவிஞராக அறியப்படுகிறார்.

# எழுத்தாளர் அ. வெண்ணிலா

(கட்டுரை)

## எழுத்துலக அறிமுகம்:



சிறு வயதில் இருந்தே புத்தகங்கள் வாசிக்கத் தொடங்கிய வெண்ணிலா தன்னுடைய 27 வது வயதில் எழுதத் தொடங்கினார். ஏழு கவிதை நூல்கள், ஒரு கடித இலக்கிய நூல், ஏழு கட்டுரைத் தொகுப்புகள், மூன்று சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு நாவல்கள், ஓர் ஆய்வு நூல் பதிப்பாசிரியராக இரண்டு நூல்கள், ஐந்து தொகுப்பு நூல்கள் என வெண்ணிலாவின் இலக்கியப் படைப்புகள் அணிவகுத்து நிற்கின்றன.

குழந்தைகள், கைவிடப்பட்ட முதியோர்கள், நவீன வாழ்வியல், உணவு முறைகள், பெண்கள் சந்திக்கும் இன்னல்கள்[6] போன்ற சமகாலச் சிக்கல்கள் குறித்த சிந்தனைகள் இவரது அனைத்து வகை இலக்கியங்களிலும் இடம்பெறுகின்றன. வரலாற்றை மறுவாசிப்பிற்குத் தூண்டும் படைப்புகளையும் கட்டுரைகளையும் எழுதி பதிப்பித்துள்ளார். வெண்ணிலாவின் படைப்புகளை இதுவரை 20 மாணவர்களுக்கும் மேற்பட்டோர் இளம் முனைவர் ஆய்வும், முனைவர் பட்ட ஆய்வும் செய்துள்ளனர்.

கரிசல் இலக்கியவாதி கி.ராவின் கதை சொல்லி மற்றும் புத்தகம் பேசுது இதழ்களின் ஆசிரியர் குழுவில் ஒருவராக வெண்ணிலா செயல்பட்டுள்ளார். சாகித்ய அகாதமிக்காக தமிழ்நாடு, இலங்கை, ஆத்திரேலியா, கனடா, பிரான்சு நாடுகளில் வாழும் தமிழ்ப்பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுக்கும் பணியில் ஈடுபட்டார்.2002-ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்ற பன்னாட்டு பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகப் பங்கேற்றார்.2011, சனவரியில் புது தில்லியில் நடைபெற்ற காமன்வெல்த் எழுத்தாளர்களுக்கான மாநாட்டில் தமிழகப் பிரதிநிதியாக கலந்து கொண்டார். ஒரிசாவில் நடைபெற்ற சார்க் இளம் கவிஞர்கள் மாநாடு,சான்று தேவை] அசாம் மற்றும் மிசோரம் மாநிலங்களில் நடந்த பன்மொழிக் கவிஞர்கள் சந்திப்பு போன்ற நிகழ்ச்சிகளிலும் தமிழகத்தின் பிரதிநிதியாக வெண்ணிலா பங்கேற்றுள்ளார்.

# எழுத்தாளர் அ. வெண்ணிலா

(கட்டுரை)

## திரைப்பட அனுபவம்:

சகுந்தலாவின் காதலன் என்ற திரைப்படத்தில் வசனகர்த்தாகவும் துணை இயக்குனராகவும் வெண்ணிலா பணியாற்றியுள்ளார். இரண்டு திரைப்படங்களில் பாடல்களும் எழுதியுள்ளார்.

## முக்கிய நூல்கள்:

பிருந்தாவும் இளம் பருவத்து ஆண்களும் என்ற சிறுகதைத் தொகுப்பை ஆனந்த விகடன் வெளியிட்டிருக்கிறது.

ராசேந்திர சோழன் வாழ்வை அடைப்படையாகக் கொண்டு இவர் எழுதிய கங்காபுரம் என்ற வரலாற்று நாவல் அதிகம் பேசப்பட்டதோடு, பல்வேறு விருதுகளையும் வென்றது. நவீனப் பெண் எழுத்தாளர்களில் வெண்ணிலாதான் வரலாற்று நாவல் எழுதிய முதல் பெண் எழுத்தாளர்.

85 ஆண்டுகால தமிழ் சிறுகதை உலகில் இடம்பெற்றுள்ள பெண்களான இராமாமிர்தம் அம்மையார் முதல் கவிதா சொர்ணவல்லி வரையிலான பல பெண் எழுத்தாளர்களின் கதைகளைத் தொகுத்து இவர் உருவாக்கிய மீதம் இருக்கும் சொல் என்ற கதைத் தொகுப்பு தமிழுலகிற்கு ஒரு வரலாற்று ஆவணம்.

கனவைப் போல மரணம் என்ற தலைப்பிலான இவர் நூலை தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை 2007 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலாகத் தேர்வு செய்து பரிசு வழங்கியது.

குங்குமம் தோழியில் தொடராக வந்த ததும்பி வழியும் மௌனம், ஆதியில் சொற்கள் இருந்தன, நீரில் அலையும் முகம், கனவிருந்த கூடு, இந்து தமிழ் நாளிதழில் தொடராக வெளிவந்த மரணம் ஒரு கலை போன்றவை எளிய சொற்களால் ஆக்கப்பட்ட சில கவித்துவமிக்க புத்தகங்களின் பட்டியலாகும்.

## விருதுகள்:



- சிற்பி அறக்கட்டளை விருது
- கவிஞர் தேவமகள் அறக்கட்டளை விருது
- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வழங்கும் செல்வன் கார்க்கி விருது
- ஏலாதி அறக்கட்டளை விருது
- கவிஞர் வைரமுத்து வழங்கும் 'கவிஞர் தின விருது'
- திருப்பூர் மத்திய அரிமா சங்கம் வழங்கும் சக்தி — 2005 விருது
- சென்னை புத்தகக் கண்காட்சி — 2005 ஆம் ஆண்டில் இயக்குநர் பார்த்திபன் வழங்கிய சிறந்த படைப்பாளி விருது
- நெய்வேலி புத்தகக் கண்காட்சி — 2005 இல் வழங்கிய சிறந்த எழுத்தாளர் விருது.
- தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான விருது - 2008
- செயந்தன் நினைவு கவிதை விருது' - 2010 தமிழக ஆளுநர் வழங்கியது

- பிருந்தாவும் இளம் பருவத்து ஆண்களும் சிறுகதைத் தொகுப்பிற்காக: தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க 'புதுமைப்பித்தன் நினைவு விருது - 2013'

- கங்காபுரம் நாவலுக்காக: கோவை கத்தூரி சீனிவாசன் அறக்கட்டளையின் 'ரங்கம்மாள் நினைவு விருது, சமயபுரம் எசு.ஆர்.வி. பள்ளியின் 'படைப்பூக்கத் தமிழ் விருது, அவள் விகடனின் 'இலக்கிய விருது


- 2021 ஆம் ஆண்டுக்கான புதுமைப் பித்தன் படைப்பிலக்கிய விருது.

# எழுத்தாளர் அ. வெண்ணிலா

(கட்டுரை)



"முதல் இரத்தம் பார்த்து
கலங்கி
பாதி வகுப்பில் வெளியேறும்
பெண்
ஒரு செவிலித் தாய்க்கான
பிரியத்தை விட்டுச் செல்கிறாள்
தன் வகுப்பறையிடம்..."
அ. வெண்ணிலா



"மேலும் பல படைப்புகள் மூலம் தமிழை கௌரவிக்க வாழ்த்துவோம்"

நன்றி:
விக்கிப்பீடியா,வல்லினம் கலை இலக்கிய இதழ், மற்றும் விகடன் நேர்காணல்.



கவிஞர் குமர.தர்மசீலன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நண்பனையும் நேசி...
எதிரியையும் நேசி
நண்பன் உன் வெற்றிக்கு
துணையாய் இருப்பான்
எதிரி உன் வெற்றிக்கு
காரணமாய் இருப்பான்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com